# திருவாலி - திருநகரி



ஆசிரியர்:
'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸேவா ரசிகன்'
'ஸ்ரீ வேதாந்த தேசிக பதாம்புஜ ஸேவா ரசிகன்'
ஒப்பிலியப்பன் கோவில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன்

அட்டைப்படத்தில்

திருவாலி திவ்யதேசத்தில் திருமங்கை மன்னன், குமுதவல்லி நாச்சியார்

( படம் உதவி: ராமானுஜ தாஸர்கள்/pbase.com )

# உள்ளடக்கம்

திருவாலி-திருநகரி ( ஆழ்வார் அநுபவம்) ----- பக்கம் 1 முதல் 9 வரை



திருவயலாளி மணவாளப் பெருமாள் - கருட வாஹனம் - திருநகரி

(நன்றி: : ராமானுஜ தாஸர்கள் /pbase.com)

www.sadagopan.org

ஸ்ரீ

# திருவாலி - திருநகரி - ஆழ்வார்கள் அநுபவம்

(சோழ நாட்டு திருப்பதி(

ஆசிரியர்: ஒப்பிலியப்பன் **கோயில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன்**

( Editor-in-Chief of eBooks at www.sadagopan.org )

****

விஜய வருஷம் - கார்த்திகை மாதம் - கார்த்திகை நக்ஷத்ரம் - திருமங்கை ஆழ்வார் திருவவதார தினம் (Date 12-15-2013)

****

அன்புள்ள ஆஸ்திக அன்பர்களுக்கு,

அடியேனின் தாஸஸ்ய விஞ்ஞாபனம். கார்த்திகை மாத கார்த்திகை நக்ஷத்திரத்தில் அவதரித்த திர்மங்கையாழ்வார் திருவவதார தினத்தில் அடியேனுடைய ஸமர்ப்பணமாக இந்த மின் - புஸ்தகத்தை வெளியிடுவதை அடியேனின் பாக்கியமாக கருதுகிறேன்.

முன்பு IBM என்கிற ஸ்தாபனத்தில் உத்யோகத்திலிருந்த போது 1992 செப்டம்பர் தொடங்கி மார்ச் 1993 வரை வேலை நிமித்தமாக பல வெளிநாடுகளுக்கு ப்ரயாணம் செய்து கொண்டிருந்த வேளையில் பகவத் சிந்தனை விடாமலிருக்க 108 திவ்ய தேசங்களைப்பற்றியும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களைப் பற்றியும், வேத வேதாந்தங்களைப் பற்றியும் ஏற்பட்ட எண்ணங்களின் கருத்து-கோவையை ஒரு நூல் வடிவமாக எழுதியது நேற்று நடந்தது போல் பசுமையாக நினைவில் நிற்கிறது.

பகவத்-பாகவத-ஆசார்ய கடாக்ஷங்களினால் இப்போது அந்த நூலில் இருந்து ஒரு பகுதியாக, கலியன் அவதரித்த தலமான திருக்குறையலூர் ஸமீபத்திலுள்ளதும், திருவஷ்டாக்ஷரத்தின் உபதேசம் பெற்ற தலமும் ஆகிய திருவாலி-திருநகரி திருப்பதிகளை பற்றிய கட்டுரையை இங்கே ஸமர்ப்பிக்கிறேன்.

||ஆழ்வார் எம்பெருமானார் ஆசார்யர் திருவடிகளே சரணம்||

தாஸன்

ஒப்பிலியப்பன் கோவில் வரதாசாரி சடகோபன்

## திருமங்கையாழ்வார் தனியன்

(எம்பெருமானார் ஸ்ரீராமாநுஜர் இயற்றிய தனியன்)

வாழி பரகாலன் வாழி கலிகன்றி,

வாழி குறையலூர் வாழ்வேன்ண்தன் -- வாழியரோ

மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்

தூயோன் சுடர்மான வேல்.

## சீர்காழி, திருவாலி ஸமீபம் உள்ள 14 திருப்பதிகள்

காழிச் சீராம விண்ணகரம் என்ற சீர்காழி ஸமீபம் திருநாங்கூர் திருப்பதிகள் என்று ஸேவித்துக் கொள்ளப்படும் 11 திருப்பதிகளும், திருவாலி, திருநகரி என்ற 2 திருப்பதிகளும் உள்ளன. சீர்காழி திருப்பதியுடன் சேர்ந்த இந்த 13 திருப்பதிகளுடன், சீர்காழி ஸமீபம் உள்ள திருப்பதிகள் கணக்கு 14 ஆகும்.



திருமங்கையாழ்வார் - திருவாலி (நன்றி; ராமாநுஜ தாசர்கள்/ pbase.com)

இந்த 14 திருப்பதிகளும், அங்கு கோயில் கொண்டுள்ள அர்ச்சா மூர்த்திகளும் பின் வருமாறு நமஸ்கரித்துக் கொள்ளபட்டுள்ளார்கள்:

## திருநாங்கூர் திருப்பதிகள் (11)

( 1 ) திருமணி மாடக்கோயில்: ஸ்ரீ புண்டரீகவல்லீ ஸமேத ஸ்ரீ நர நாராயண ஸ்வாமிநே நம:

( 2 ) திருவைகுந்த விண்ணகரம்: ஸ்ரீ வைகுந்தவல்லீ ஸமேத ஸ்ரீ வைகுந்த நாத (தாமரைக்கண் நெடிய) ஸ்வாமிநே நம:

( 3 ) திரு அரிமேய விண்ணகரம் (குடமாடு கூத்தர் கோயில்) ஸ்ரீ அம்ருத கடவல்லீ ஸமேத ஸ்ரீ குடமாடு கூத்தர் ஸ்வாமிநே நம:

( 4 ) திருத்தேவனார் தொகை (கீழைச்சாலை மாதவப் பெருமாள் கோயில்): ஸ்ரீ

கடல்மகள் ஸமேத ஸ்ரீ தெய்வநாயக ஸ்வாமிநே நம:

( 5 ) திருவண்புருடோத்தமம்: ஸ்ரீ புருஷோத்தம நாயகி ஸமேத ஸ்ரீ புருஷோத்தம ஸ்வாமிநே நம:

( 6 ) திருசெம்பொன்செய்கோயில்: ஸ்ரீ அல்லிமாமலர் நாச்சியார் ஸமேத ஸ்ரீ பேரருளாள ஸ்வாமிநே நம:

( 7 ) திருத்தெற்றியம்பலம்: ஸ்ரீ செங்கமலவல்லி ஸமேத ஸ்ரீ செங்கண்மால் ஸ்வாமிநே நம:

( 8 ) திருமணிக்கூடம்: ஸ்ரீ திருமாமகள் ஸமேத ஸ்ரீ மணிக்கூட நாயக ஸ்வாமிநே நம:

( 9 ) திருவெள்ளக்குளம் (அண்ணன் கோயில்): பூவார் திருமகள் ஸமேத ஸ்ரீ கண்ணன் (நாராயண) ஸ்வாமிநே நம:

( 10 ) திருப்பார்த்தன்பள்ளி: ஸ்ரீ தாமரை நாயகி ஸமேத ஸ்ரீ தாமரையாள் கேள்வன் ஸ்வாமிநே நம:

( 11 ) திருக்காவளம்பாடி: ஸ்ரீ மடவரல் மங்கை ஸமேத ஸ்ரீ கோபாலக்ருஷ்ண ஸ்வாமிநே நம:

## மற்றைய 3 திருப்பதிகள்

( 12 ), ( 13 ) திரு ஆலி (திருவாலி) / திருநகரி (தென்னாலி, வயலாலி): திவ்ய தேச கணக்கில், ஒன்றாக கணக்கிடப்பட்ட போதிலும், இந்த ஸன்னதிகள் இரண்டு தனி ஊர்களில் உள்ளன.

( 12 ) திருவாலி - ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஸமேத ஸ்ரீ நரஸிம்ஹ ஸ்வாமிநே நம:

( 13 ) திருநகரி - ஸ்ரீ அம்ருதகடவல்லீ ஸமேத வயலாலி மணவாள ஸ்வாமிநே நம:

( 14 ) திருக்காழிச் சீராம விண்ணகரம் (சீர்காழி): ஸ்ரீ மட்டவிழுங்குழலி ஸமேத ஸ்ரீ தாடாள (த்ரிவிக்ரம மூர்த்தி) ஸ்வாமிநே நம:

சீர்காழி ஸமீபம் உள்ள இந்த 14 சோழ நாட்டு திருப்பதிகளில் கோயில் கொண்டு

नित्यैवेषा जगन्माता विष्णोः श्रीरनपायनी ।

यथा सर्वगतो विष्णुस्तथैवेयं द्विजोत्तमः ॥

நித்யைவேஷா ஜகந்மாதா விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ |

யதா ஸர்வகதோ விஷ்ணுஸ்ததைவேயம் த்விஜோத்தம: ||

ஸ்ரீ விஷ்ணு புராண ச்லோகம் சொல்லும் வகையில், ஸ்ரீ மஹாலக்ஷ்மி உலகங்களுக்கு தாயாராயும், எப்போதும் பகவானான ஸ்ரீமந் நாராயணனை பிரியாதவளாக ஸேவை தருகிறாள்.

திருவாலி / திருநகரி திருப்பதி

திருவாலியும் ,திருநகரியும் இரண்டு மைல் தூரத்தில் உள்ளன. அவை இரண்டும் திவ்யதேச கணக்கில் ஒன்று .தேவி பகவானை ஆலிங்கனம் செய்து கொண்டதால் ,இத் திருப்பதிக்கு திருவாலி என்ற பெயர் ஏற்பட்டது .திருவாலியில் நரஸிம்ஹன் ஸன்னதியும் ,அதற்கு 2 மைல் தூரத்தில் உள்ள திருநகரியில் வயலாலி மணவாளன் , திருமங்கையாழ்வார் ஸன்னதிகளும் உள்ளன .திருநகரிக்கு மிகவும் ஸமீபம் உள்ள வேதராஜபுரத்து மைதானத்தில் ,பங்குனி உத்தர தினத்தில் வேடுபறி உத்ஸவம் நடைபெறுகிறது .திருமங்கை மன்னன் அவதரித்த திருக்குறையலூரும் திருநகரிக்கருகில் உள்ளது .இந்த திருப்பதியைப் பற்றி 43 பாசுரங்கள் நமக்கு கிடைத்துள்ளன . குலசேகராழ்வார் ,ஒரு பாசுர மூலமும் ,திருமங்கை 42 பாசுரங்கள் மூலமும் இத் திருப்பதியை கொண்டாடியுள்ளார்கள்.

எங்கும் வயல்களால் அலங்கரிக்கப்பட்டு ,பசுமை ,தன தான்ய செழிப்பு மிகுந்த திருவாலிக்கு யஜமானான பகவானை“ வயல் அணி ஆலி அம்மானே” என்று திருமங்கை அன்புடன் அழைத்து ,ஆலி நாடானான எனக்கு உன்னிடம் விசேஷ ப்ரேமை உண்டு . அது தெரிந்த நீ ,தாஸனான எனது நெஞ்சில் ஸ்வதந்த்ரத்துடன் வந்து தானாகவே புகுந்தாய் .நீயோ என்னுடைய ஆராதன மூர்த்தி .எந்த திவ்ய தேசம் சென்றாலும் , உன்னை மறவாது ,என் சிந்தனையில் வைத்து நிற்பேன் .காருண்ய பாவம் கொண்டு , நீயே வந்து ,எனது மனதில் எழுந்தருளின இனிமையும் ,எளிமையும் நினைத்தால் ,

உன்னை தயாநிதியான திரு) பிராட்டி (என்று அழைக்க வேண்டும் என்று தோன்றுகிறது .இந்த விதத்தில் நீ தயாமயியான ஸுதாமயி) பெரிய பிராட்டி (போல் ஆகி நிற்கிறாய் .ஆகையால் ,திருவுக்கும் திருவாகிய உன்னைத் திருவே என்று என்னுடைய முதல் பாசுரத்திலே அழைக்கிறேன் என்று திருமங்கை பக்தி உணர்ச்சி மிகுதியால் கூறினார் .இந்த முதல் பாசுரம் பின் வருமாறு:

வந்துனடியேன் மனம் புகுந்தாய் புகுந்தற்பின் வணங்குமென்

சிந்தனைக்கினியாய் !திருவே !என்னாருயிறே,

அந்தளிரணியார்சோகின் இளந்தளிர்கள் கலந்வையெங்கும்

செந்தழல் புரையும் திருவாலியம்மானே!

அழகு மிகுந்த திருவாலிக்கு ஸ்வாமியே !கௌஸ்துபம் என்ற ரத்னத்தை அணிந்து கொண்டு ,நீலமலை போல் பாற்கடலில் ,ஆதிசேஷன் மேல் சயனித்துக் கொண்டிருந்த நீ ,அழகிய பாற்கடலையும் ,சௌக்யமான அரவணையையும் விட்டு ,என் மனம் வந்து புகுந்தாய் என்று மற்ற ஒரு பாசுரப் பகுதியில் ,பின் வருமாறு கூறினார்:

நீலத் தடவரை மாமணி நிகழக் கிடந்தது போல் அரவணை

வேலைத் தலைக்கிடந்தாய் அடியேன் மனத்திருந்தாய்

லோகபோகங்களில் ஆழ்ந்திருந்த என்னைத் திருப்பி ,உன் செவ்விய திருவடிகளில் த்ருட பக்தி ஏற்படுமாறு செய்தாய் .இந்த கருத்தை “மின்னின் மன்னுநுடங்கிடை மடவார் தம் சிந்தை மறந்து வந்து ,நின் மன்னு சேவடிக்கே மறவாமை வைத்தாய் ”என்று வெளியிட்டு தன் நன்றியை கலியன் தெரிவித்தார் .என் மனதில் புகுந்துள்ள உன்னை என்னை விட்டு எங்கும் செல்ல ஸம்மதிக்க மாட்டேன் .தினமும் ,கருமுகை ,கற்பகம் ,நாழல் ,மந்தாரம் , ஸௌகந்தி ,செங்கழுநீர் ,தாமரை ,ஜாதிதாழை ஆகிய எட்டு விதமான பூக்கள் எடுத்து உன்னை ஆராதித்த பின்னர் ,எட்டு அக்ஷரங்கள் கொண்ட மூலமந்தரத்தினால் உன்னை மானஸீகமாக ஆராதிப்பேன் .நீயும் என் மனதை விட்டகலாது இருக்க வேணும் என்று பின் வருமாறு கேட்டுக் கொண்டார்:

கந்த மாமலரெட்டுமிட்டு நின் காமர் சேவடிகை தொழுதெழும்

புந்தியேன் மனத்தே புகுந்தாய்ப் போகலொட்டேன்

சந்திவேள்வி சடங்கு நான் மறையோதி யோதுவித்தாதியாய் வரும்

அந்தணாளற் அறா அணியாலியம்மானே.

என் மனதில் புகுந்த உன்னை என்றும் விடமாட்டேன் .நீ என் மனதை விட்டு அகல ஸம்மதிக்க மாட்டேன் என்ற தீர்மானத்தை மற்றும் ஒரு பாசுரத்தில்“ ,உன்னடியேன் மனம் புகுந்த ,அப்புலவ !புண்ணியனே !புகுந்தாயைப் போகலொட்டேன் ”என்ற விதமாக சொன்னார்.



திருநகரி பெருமாள் (நன்றி: www.srivaishnavam.com)

திருவாலி பற்றிய முதல் பத்து பாசுரங்களில் ,முதல் நான்கில் ,பகவான் திருப்பாற்கடலை விட்டு ,தன் மனம் புகுந்ததைப் பற்றி கலியன் கூறினார் .அடுத்த பத்து பாசுரங்களில் , தன் மனதில் புகுந்தவன் ,அங்கு நிலைத்திருக்க வேண்டுமென பிரார்த்தித்துக் கொண்டார்.

அடுத்த பத்து பாசுரங்களில் ,கலியன் பரகால நாயகியாக மாறி ,வண்டு ,குருகை முதலியவைகளை வயலாலி மணவாளனிடம் தூதாக அனுப்புகிறார் .அவனுடன் கூடி

இருக்க விரும்பி ,அவனுடைய பிரிவு பொறுக்காமல் கதறுகிறாள் .என் ஸ்வாமியே“ ! துயிலாத கண்ணிணையேன் நின் நினைந்து துயர்வனோ ”?உன் பிரிவால் ஏற்பட்ட சோகத்தால் ,உறக்கமேயில்லாத இரு கண்களையுடைய நான் உன்னையே நினைத்து , நினைத்து துக்கப்பட்டுக் கொண்டே இருக்கவேண்டுமென்பது உனது எண்ணமா என்று பரகால நாயகி கேட்கிறாள் .பகவானுடைய ஸம்ச்லேஷத்தை) சேர்த்தியை (வேண்டும் பாசுரங்கள் பகவத் பக்தி மிகுந்தவை .ஆழ்வாரின் உருக்கமான வேண்டுகோளுக்கு செவி சாய்த்த வயலாளி மணவாளன் ,பரகால நாயகி முன் தோன்றினான் .அவளை வா, நம் ஊர் போகலாம் என்றழைத்தான் .உடனே பரகால நாயகி அவன் துணையுடன் திருவாலி புக புறப்படுகிறாள் .அதுவரை ,தன் பெண்ணின் கஷ்டம் ஸகியாது , அவளைத் தேற்றி வந்த பரகால நாயகியின் தாயார் ,நித்ராவஸ்தை ஏற்பட்டு சற்று தூங்கிவிட்டாள் .அந்த சமயத்தில் ,தன் பெண்“ கரியான் ஒரு காளையுடன்” நடந்து , வீட்டை விட்டு போவதைக் கண்டு ,பதறி எழுந்தாள் .திருடன் போல் ஒருவன் தன் வீட்டில் நுழைந்து ,தன் பெண்ணை அழைத்துப் போவதைக் கண்டு ,இந்த கருமேனிக் காளை ,திருவாலி மணவாளன்தான் என்ற அனுமானத்திற்கு வந்தாள் .என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் ,என் பெண் எங்கோ ,ஒரு வேற்று ஊரானுடன் போய்க் கொண்டிருக்கிறாளே ,என்னவாகுமோ என்று தாய்க்கு உரிய கவலையுடன் நடுங்குகிறாள் .பெற்ற தாயை விட்டு விலகின பெண் ,இந்த புது மனிதனுடன் திருவாலி சேர்வாளோ என்னவோ ,நான் அறியேன் என்று கூறி நின்றாள்.

கள்வனாய், இரவில் வந்து தன் மகளை வசப்படுத்தி திருவாலி அழைத்துச் சென்ற திருவாலி எம்பெருமானை குற்றம் சொல்வதில் பயனில்லை. தன் மகள், தாயிடம் இரக்கமில்லாமலும், தான் வளர்த்த சிறு கிளி, தான் உபயோகப்படுத்தின விளையாட்டு பொருள்கள் எல்லாவற்றையும் ஒரு நொடியில் உதறி தள்ளிவிட்டு, திருவாலிப் பெருமானுடன் ஓடிப் போனதை நினைத்து தாய் வருந்தினாள். பின்னர், தன் மகள் மேல் குற்றம் கூறுவது சரியல்ல என்று தாய் குலத்திற்கே உரிய வாத்ஸல்யத்துடன், பரகால நாயகியின் அன்னை, தன் மன நிலையை மாற்றிக் கொண்டாள். என் பெண்ணோ, அழகில் மஹாலக்ஷ்மி போன்றவள். அப்பேற்பட்ட சௌந்தர்யம் கொண்டவள் திருவாலி மணவாளனைத் தவிர, வேறு யாரை நினக்க முடியும்? தன் மணவாளனுடன் திருவாலி சேர்ந்ததும், என்னையும் கூப்பிட்டு தன்னையும் புக்ககத்தில்

இரு என்று அழைக்கப் போகிறாள் எனக் கூறி தனது மனதை தேற்றிக் கொண்டாள்.

பந்து ஜனங்களிடம் உள்ள அன்பை ,பகவானிடம் திருப்ப வேணும் என்பதை தெரிவிக்க ,கலியன் ,பரகால நாயகியின் தாயாக மாறி ,அவள் தன் பெண்ணை பகவானிடம் இழந்த சமயம் பட்ட பரிபவத்தை பத்து பாசுரங்கள் மூலம் தெரிவித்தார் . பகவத் விஷயமே மிகவும் தேட வேண்டியது என்பதை இப் பாசுரங்கள் மூலம் கலியன் உபதேசித்தார்.





வயலாளி மணவாளன் (இடது) ஸ்வர்ண ஸிம்ஹாஸனம் மற்றும் திருமங்கையாழ்வார் குமுதவல்லி நாச்சியார் (வலது) ஸ்வர்ண ஸிம்ஹாஸனம்
(நன்றி: www.anudinam.org)

திருநெடுந்தாண்டக பாசுரப் பகுதி ஒன்றில் பரகால நாயகியாக தான் மாறி ,பகவானைப் பிரிந்து ,அவனுடைய ஸம்ச்லேஷம் வேண்டி கதறியதை பின் வருமாறு திருமங்கை விவரித்தார் .அது கண்டு ,தன் தாயார் புலம்பினதையும் விவரித்தார்:

நெஞ்சுருகிக் கண் பனிப்ப நிற்கும் சோரும்

நெடிதுயிர்க்கு முண்டறியாளுறக்கம் பேணாள்

நஞ்சரவில் துயிலமர்ந்த நம்பீயென்றும்

வம்பார்பூம் **வயலாளி மைந்தா** வென்னும்

அஞ்சிறைய புட் கொடியே யாடும் பாடும்

அணியரங்க மாடுதுமோ தோழீயென்னும்

**என் சிறகின் கீழடங்காப் பெண்ணைப் பெற்றேன்**

**இருநிலத்தோர் பழி படைத்தேன் ஏ பாவமே.**

அஷ்டாக்ஷர விமான நிழலில் கோயில் கொண்டுள்ள வயலாளி மணவாளனையும், அவன் பிராட்டியான அம்ருதகடவல்லியையும் பிரார்த்தித்துக் கொண்டு, திருமங்கை காட்டிக் கொடுத்த பக்தி மார்க்கத்தை நாமும் கடை பிடிப்போமாக!

**श्रीवाली-श्रीनगरी क्षेत्रे श्री लक्ष्मीपुरे ईलाक्षिणी पुष्करणी तटे अष्टाक्षर विमानच्छायायां श्रीमते अमृतघटवल्ली समेत श्री लाक्ष्मीनृसिम्हाय तटा केदारपतिवराय (வயலாளி மணவாளன்) श्री कमला पतये परब्रह्मणे नमः**

SrIvAlI-SrInagarI kshetre, SrI lakshmIpure, IlAkshiNI pushkaraNI taTe, ashTAkshara vimAnacChAyAyAm, SrImate amrtaghaTavallI sameta SrI lAkshmInrsimhAya, taTA kedArapativarAya (vayalALi maNavaLan) SrI kamalA pataye parabrahmaNe namaH

(**NOTE:** The salutations are from a monograph '**108 divya deSa virAjamAna divya dampatyo: naamAvaLi: leelAmrutam'** authored by two great divya deSa mangaLASAsana rasikAs, Sriman U.Ve. PadmanAbhan Swamy and Sri Ramanasundaram of New Delhi (in the year 2000). This book with 200 pages is a veritable treasure house of anubhavam by AzhwArs and pUrvAcAryAs.)

ஆழ்வார் எம்பெருமானார் ஆசார்யர் திருவடிகளே சரணம்

தாஸன்

ஒப்பிலியப்பன் கோவில் வரதசாரி சடகோபன்